DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.102-2026

PW - 3

| | | |
|---|---|---|
| Name | : | ஸ்டீபன் லூர்துராஜ் (Lw - 11 ) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(எதிரி ஆஜர்)**

முதல் விசாரணை **Date : 08.07.2026**

நான் வாழவந்திநாடு காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலர் திரு. முத்துசாமி, புலன் விசாரணை அதிகாரிகளான உதவி ஆய்வாளர் திரு. தியாகராஜு மற்றும் உதவி ஆய்வாளர் திரு. குமார் ஆகியோரின் கையொப்பம் எனக்கு தெரியும், ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 28.04.2024ம் தேதி 12.00 மணிக்கு வாழவந்திநாடு காவல் நிலையத்தில் தலைமை காவலர் திரு. முத்துசாமி என்பவர் நிலைய பொறுப்பு அலுவலில் இருந்தபோது முன்னதாக நாமக்கல் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமைனையில் இருந்து கிடைக்கப்பெற்ற கொங்கன் என்பவரின் அடிதடி வழக்கு தகவலை பெற்று மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த கொங்கன் மயக்க நிலையில் இருந்ததால் அவருடன் இருந்த அவரது மனைவி பாப்பாம்மாளை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று பின் நிலையம் வந்து நிலைய கு.எ.50/2024, இதச

294(b), 324, 506(ii) பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அதன் அசல் மற்றும் வாதியின் புகார் மனுவை இணைத்து கனம் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பியும் பிற நகல்களை உரிய அதிகாரிகளுக்கு அனுப்பி ஒரு நகலை புலன் விசாரணைக்காக காவல் உதவி ஆய்வாளர் திரு. தியாகராஜு அவர்களின் பார்வைக்கு வைத்தார். **(**புகார் வாக்குமூலம் அ**.**சா**.**ஆ**.3** ஆகவும்**,** முதல் தகவல் அறிக்கை அ**.**சா**.**ஆ**.4** ஆகவும் குறியீடுசெய்யப்படுகிறது**.)**

வழக்கை புலன் விசாரணைக்கு எடுததுக்கொண்ட காவல் உதவி ஆய்வாளர் திரு. தியாகராஜு கடந்த 28.04.2024ம் தேதி 19.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் கணேசன், ராஜா ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்து அதில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றார். **(**பார்வை மகஜர் அ**.**சா**.**ஆ**.5** ஆகவும் மாதிரி வரைபடம் அ**.**சா**.**ஆ**.6** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**.)** பின்னர் சம்பவயிடத்தில் சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட சுமார் 90 செ.மீ. நீளமுள்ள தென்னை மட்டை ஒன்றை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றினார். பின்பு கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தை படிவம் 91 ன் மூலம் கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார். **(** கைப்பற்றுதல் மகசர் அ**.**சா**.**ஆ**.7** ஆகவும்**,** படிவம் **91** அ**.**சா**.**ஆ**.8** ஆகவும்**, 90** செ**.**மீ நீளமுள்ள தென்னை மட்டை அ**.**சா**.**பொ**. 1** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. )**பின்னர் சாட்சிகள் பாப்பாம்மாள், கொங்கன், குப்புசாமி, சிவபிரகாசம், கணேசன், ராஜா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். பின்னர் இவ்வழக்கில் எதிரியை கைது செய்ய வேண்டிய அவசியம் ஏற்படாததால் எதிரிக்கு குவிமுச பிரிவு 41A ன் கீழ் அறிவிப்பு கொடுத்து அதன் பேரில் எதிரி புலன் விசாரணைக்கு முறையாக ஆஜரானதால் எதிரி இவ்வழக்கில் கைது செய்யப்படவில்லை. பின்னர் இவ்வழக்கின் மேல் விசாரணைக்காக வழக்கின் கோப்புகளை காவல் உதவி ஆய்வாளர் திரு. குமார் அவர்களின் பார்வைக்கு வைத்தார்.

வழக்கை தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்ட காவல் உதவி ஆய்வாள்ர் திரு. குமார் கடந்த 25.01.2025ம் தேதி சாட்சி கொங்கனுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு. கோபால் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்றிதழ் பெற்றார். **(**விபத்து பதிவேடு அ**.**சா**.**ஆ**.9** ஆகவும்**,** காயச்சான்றிதழ் அ**.,**சா**.**ஆ**.10** ஆகவும்**,** மருத்துவ கருத்துரை அ**.**சா**.**ஆ**.11** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**.)** பின்னர் இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த

தலைமை காவலர் திரு. முத்துசாமி என்பரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். இத்துடன் தனது புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது இதச 294(b), 324, 506(ii) பிரிவுகளின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

நான் சொல்லும் நாள் நேரத்தில் முதல் தகவல் அறிக்கை எதுவும் பதிவு செய்யவில்லை என்றும், வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றும், சாட்சிகள் யாரையும் விசாரணை செய்யவில்லை என்றும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றும், முன்விரோதம் காரணமாக வாதி கொடுத்த பொய்யான புகாரின் பேரில் சரிவர புலன் விசாரணை செய்யாமல் தாக்கல் செய்யப்பட்ட வழக்கிற்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை: இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**